RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# தமிழ்ச் செவ்வியலில் கோசர்குடியின் இனவரைவியல்

ப. வேல்முருகன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்-610005, தமிழ்நாடு, இந்தியா

# Ethnography of Khosargudi in Tamil

**P. Velmurugan** [a, *]

[a] Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur-610 005, Tamil Nadu, India.

* Corresponding Author: pdrvelmurugan@gmail.com

Received: 23-09-2025
Revised: 12-12-2025
Accepted: 26-12-2025
Published: 08-01-2026

Check for updates

**ABSTRACT**

The Moovendras excelled in trade and administration within their territory. Due to this myth, various ethnic groups entered Tamil Nadu. As a result, the foreigners waged various wars to suppress the ruling power of the Moovendras. Some of them migrated to Tamil Nadu in search of livelihood. The natives who came here initially led a simple life and later improved themselves on many levels. The arriving natives established themselves as the bravest of the brave. The literature shows that the monks used these relics to win their battles. It is also known that the leaders who emerged from these villages, ruled Tamil Nadu for a period of time with or without the involvement of the chancellors. The chants of Tamil Nadu also started fighting across the borders for the sake of some gods. The classical texts also record the kings who were defeated by the chancellors. The objective of this paper is to explore the history of the Khosar tribe / ethnic group among the people who came to Tamil Nadu as foreigners and the facts revealed by the archaeological evidence left behind by the tribe

**Keywords:** Ethnic Groups, Moovendr, Khosar tribe, Classical Texts

## முன்னுரை

மனிதன், தான் தோற்றம் பெற்ற காலக்கட்டத்தில் எவ்வித வளர்ச்சியும் அடையாதவனாகவே வாழ்வியலைத் தொடங்கினான். காலச் சக்கரம் சுழச்சுழ, மனிதனின் அகம் மற்றும் புறம் சார்ந்த வாழ்வியலானது, அவனது அறிவு - உழைப்பு இவ்விரண்டின் செயற்பாட்டினால், சமூக - பொருளாதார வளர்ச்சியும் மாற்றமும் பெறத் தொடங்கியது. இவ்வளர்ச்சி நிலைப்பாட்டைச் சுட்டுகின்ற வகையில் இனக்குழு, சீறூர்மன்னர்கள், குறுநிலமன்னர்கள், வேந்தர்கள் என்ற வரிசை முறையானது சாதாரண மக்களில் இருந்தே, வேந்தர் சமூகம் தோற்றம் பெற்றதனை அறிய முடிகின்றது. இத்தகு சூழலில் அடிமை, ஆளுமை என்கிற தன்மையும் தோற்றம் பெற்றுள்ளதை உணரலாம். சங்ககாலச் சமுதாயமானது, இத்தகைய முறையில் வளர்ச்சி நிலையினை எட்டுகின்ற போதே, தமிழகம் சாராப் பிறதேசத்துக் குடிகள் சிலரும் பொருளாதார பரிவர்த்தனை நிமித்தமாக உள்வரத் தொடங்கினர். திணைசார் பொருட்களைப் பண்டமாற்றாகப் பெற்றுக் கொள்ளும் நிலையினை இனக்குழுவினர் பெற்றிருந்தனர். பொருட்களை விடுத்து நாணயங்கள் பண்டமாற்றுக்கு வருகின்ற போதே, தமிழக வாணிகமானது பெரும்மாற்றத்தை எட்டியது என்பது தெளிவு.

மூவேந்தர்கள், தங்களின் எல்லைப் பகுதிக்குள் ஆட்சியினைச் சிறக்கச் செய்த போதும் வாணிகத்திலும் தலை சிறந்து விளங்கினர். இவ்வாணிகத்தின் காரணமாகப் பலவகை இனக்குழுக்கள் தமிழகம் புகுந்தனர். இதன்பொருட்டு வந்த வேற்றுத்தேசத்துக் குடிகள், மூவேந்தர்களின் ஆட்சி ஆளுமைத் திறத்தை அடக்க - ஒடுக்க எண்ணியே பல்வேறு போர்களை நிகழ்த்தினர். வாணிகம் விடுத்து, சில குடிகள் பிழைப்பு தேடியும் தமிழகம் வந்தேறினர். அங்ஙனம் வந்தேறிய குடியினர், ஆரம்ப காலகட்டத்தில் எளிமையான வாழ்வியலை மேற்கொண்டு, பின்பு பல நிலைகளில் தங்களை மேம்படுத்திக் கொண்டனர். வந்தேறிய குடியினர் வீரத்திலும் உயர்ந்தவர்களாகவே தங்களை நிலைகாட்டிக் கொண்டனர். இவ்வீரக்குடிகளை, வேந்தர்கள் தங்களின் போர் வெற்றிக்காகப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதனை இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இக்குடிகளிலிருந்து

தோன்றிய தலைவர்கள், ஒரு சில காலக்கட்டத்தில் தமிழகத்தை வேந்தர்களோடு இணைந்தும், இணையாமலும் ஆட்சி நடத்தினர் என்பதும் அறியமுடிகிறது. தமிழக வேந்தர்களும் சிலதேவைகளின் பொருட்டு எல்லைகளைக் கடந்து போர் நிகழ்த்த தொடங்கினர். அவ்வகையில் வேந்தர்களால் தோல்வியைத் தழுவிய மன்னர்களின் பதிவுகளையும், செவ்வியல் நூல்கள் பதிவு செய்கின்றன. வாணிகம், போர்வீரர்கள், மன்னர்களாக விளங்கிய அயல் குடியினர் பல்வேறு விதமான தொல்லியல் சான்றுகளையும் எச்சமாக விட்டுச் சென்றுள்ளனர். இவ்வெச்சங்களைத் தவிர பல அரிய கண்டுபிடிப்புகள் மற்றும் வாழ்வியலுக்குத் தேவையான கூறுகளையும் விட்டுச் சென்றுள்ளனர். இவைகளும் பண்டைய கால வாழ்வியலைப் பிரதிபலிப்பனவாகவே உள்ளன. அவ்வகையில் அயல் குடிகளாகத் தமிழகம் வந்து சிறப்பெய்திய குடிகளுள், கோசர் குடியின்/இனக்குழுவின் வரலாற்றையும், அக்குடியினர் விட்டுச் சென்ற தொல்லியல் சான்றுகளால் புலப்படும் உண்மைகளையும் ஆராய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

## கோசர்கள் - ஓர் அறிமுகம்

'கோசர்' எனும் இனத்தவர், போர் செய்வதையே தங்களுடைய குலத்தொழிலாகக் கொண்டிலங்கினர். இவர்கள் தமிழ்நாட்டு அரசர்களின்கீழ், படை வீரர்களாகச் சேர்ந்திருந்தனர். சில சமயங்களில் குடிமக்கள் அரசருக்குச் செலுத்த வேண்டிய இறைப்பணத்தை வசூல் செய்யும் சேவகர்களாகவும் இருந்தனர். இக்கோசர்கள் தமிழகத்தின் வடக்கிலிருந்தனர். துளுநாட்டின் வழியாக வந்து தங்களது செல்வாக்கைப் பரப்பினர். நாடோடிகளாக வாழ்ந்த இவர்கள் தங்களுக்கெனத் தனி நாட்டினை எந்த ஒரு தருணத்திலும் அமைத்துக் கொள்ளவில்லை. தலைவர்களாக இல்லாவிட்டாலும் வேந்தர்களுக்கு வில்லேந்தும் மறவர்களாகவே வாழ்ந்தனர். கோசர்கள் எந்தத் திசை சென்றாலும் அங்குத் தலைவனாய் விளங்கும் மன்னனுக்கு வீரனாய்ச் செயல்படுவது இவர்களிடம் இயல்பாகவே இழையோடும் பண்பாகும். கொண்கானம் பகுதியை ஆட்சி செய்த நன்னன், பிட்டங்கொற்றன் எனும் படைத்தளபதி, மூவேந்தர்கள் போன்றவர்கள் தங்களது போர் வெற்றிக்குக் கோசர்களை உடன் வைத்திருந்தனர். இவர்கள் தமிழக எல்லைப் புறத்தில் இருந்து வருகை புரிந்தவர்கள். சேரநாட்டின் பகுதிகளாகிய கொங்குநாட்டிலும், துளுநாட்டிலும் சோழநாட்டுப் பகுதிகளான செல்லூர், நியமம், வட்டாறு, அழுந்தூர் போன்ற பகுதிகளுள் நுழைந்து, அப்பகுதிகளை ஆட்சி புரிந்தவரோடு நட்பும் பகையும் கொண்டு விளங்கினர் என்பதனை அகச்சான்றுகள் நன்கு புலப்படுத்துகின்றன. நிலைகுடி இல்லா அலைகுடியான கோசர்கள் மிகப்பழமையான ஆலமரத்தின் அடியில் வசித்து வந்தனர் என்பதனை,

'தொல்மூ தாலத்து பொதியில் தோன்றிய

நாலூர்க் கோசர் நன்மொழி போல'(15:2,3) என்ற குறுந்தொகைப் பாடல் வழி அறியமுடிகிறது. இவ்விடத்து 'நாலூர்க் கோசர்' எனும் சொல்லானது, கோசர்கள் நான்கு ஊர்களைத் தங்களது இருப்பிடமாகக் கொண்டிருந்தனர் என்பதைப் புலப்படுத்துகிறது. எவ்விடத்துச் சென்றாலும் பிரியாமல் இணைந்தே செல்லும் இயல்பு வாய்ந்த சோசர்களைச் சுட்டும் பொழுது, 'கோசர்கள் வெளிநாட்டுக் குடியினர் என்றும், மௌரியர் தமிழ்நாட்டின் மீது படையெடுத்த போது இங்கு வந்து குடியேறினர்' என எஸ். கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளதாக மொ.அ. துரை அரங்கசாமி, சுட்டிக் காட்டியுள்ளார் (சங்ககாலச் சிறப்புப் பெயர்கள், 278). இவைகளின் வாயிலாகக் கோசர்கள் தமிழர் அல்லர். அவர்கள் தமிழ் வேந்தர்களுக்கும், அயல் மன்னர்களுக்கும் படை வீரர்களாய் விளங்கினர் என்பதனை அறிய முடிகின்றது.

## கோசர்களின் பண்புகள்

மேலைக்கடல் சார்ந்த துளுநாடு, சோழநாட்டு நியமம், பாண்டியநாட்டுக் கூடல், நடுநாட்டு மோகூர் போன்ற பகுதிகளில் வாழ்வியலை மேற்கொண்ட கோசர்கள் வீரர்களுக்குரித்தான பண்பினையும் கொண்டு திகழ்ந்தனர். இவ்வீரர்கள் முதுமையிலும் இளமையாக, வாட்டம் கொள்ளா உள்ளங்கொண்டு விளங்கினர். இவர்கள் மாறாச் சொற்களை உடையவர்கள் என்பதனை, `ஒன்று மொழிக்கோசர்' (73) என வரும் குறுந்தொகைப் பாடல் விளக்கிக் காட்டுகிறது. மேலும், அகநானூறு பாடல் ஒன்றில் `மெய்ம்மலி பெரும்பூண் செம்மற் கோசர்'(15:2) என்று பல்வேறு வகையான வேல்களைக் கொண்டு விளங்கும் மாறாத சொற்களையுடையவர்கள் கோசர்கள் என்ற செய்தி காணக்கிடைக்கின்றது. கருங்கண்களை உடைய - வீரத்தில் சிறப்புற்று விளங்கிய இவர்கள், நியமம் எனும் ஊரினைச் சேர்ந்தவர்கள் என்ற செய்தியினை அகநானூறு(90:10-12) பதிவு செய்துள்ளது.

கோசர்கள், குறுநில மன்னனான திதியனின் அழுந்தூரில் குழுவாக வாழ்ந்து, புன்செய் நிலங்களில் பயிர்களை விளைவித்து வந்தனர். அவ்வூரில் வாழும் மக்களில் முதியவர் ஒருவர் ஆநிரைகளை மேய்த்து வந்தார். அம்முதியவரின் மாடுகள் கோசர்களுக்கு உடைமையான - வளமான

பயிர்களை மேய்ந்து தீர்த்தன. மாடுகள் செய்த தவறுக்காக முதியவர் மன்னிப்புக் கோரிய போதும், கொடுங்குணம் கொண்ட கோசர்களின் கோபம் அடங்கவில்லை. இரக்கம் சிறிதும் இல்லாமல் அம்முதியவரின் கண்களைப் பிடுங்கினர். கோசர்களின் கொடிய பண்பினை,

'முதைபடு பசுங்காட்டு அரில்பவர் மயக்கிப்

............... ............ ............ .......:.......

ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்'(262:1-6) என்ற அகநானூறு பாடல் படம்பிடித்துக்காட்டுகின்றது. தன்னைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றியைத் தேடித்தரும் கோசர்கள், மிகவும் வன்குணம் கொண்டவர்களாகவே விளங்கினர் என்பதனையும் அறிய முடிகின்றது.

## சத்தியபுத்திரர்: கோசர்களா? அதியர்களா?

மௌரியப் பேரரசர் அசோகரின் பாறைக்கல்வெட்டில் சோழ, சேர, பாண்டிய நாட்டினைப் பற்றிய குறிப்புகளோடு 'சத்திய புத்திரர் நாடு' எனும் குறிப்பும் இடம் பெற்றுள்ளது. இப்பெயர் அதியர்களுக்குரியதா? கோசர்களுக்குரியதா? என்பதில் ஐயம் நிலவுகின்றது. கா. கோவிந்தன்(தமிழகத்தில் கோசர்கள். 61), அதிகனைப் பற்றிக் கூறுகையில், 'கோசர்குலத்தில் பிறந்து பாண்டியன் நெடுஞ்செழியன் படையில் பணிபுரிந்து வந்த அதியன்' எனும் குறிப்பினைச் சுட்டுகிறார். இதனால் அதியர்களும், கோசர்களும் ஒன்றா? என எண்ணத் தோன்றுகிறது. இவ் எண்ணத்தை நீக்கும் விதமாகச் சங்கப்பாடல்கள் அமைந்துள்ளன என்பது தெளிவு, சான்றாக அகநானூற்றில்,

`கறையடி யானை நன்னன் பாழி

ஊட்டுஅரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்

கூட்டுஎதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி

புள்ளிற்கு ஏமம் ஆகிய பெரும்பெயர்

வெள்ளத் தானை அதிகற் கொன்று, உவந்து

ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பின்' (142;9-14) என்ற பாடலடிகள், நன்னனின் நண்பன் மிஞிலியால் அதியன் இறந்தான் என்ற பொருளை முன்வைக்கின்றன. அவ்வகையில் நோக்குமிடத்து, அதியன் மிஞிலிக்குத் துணையாகச் சென்றிருக்க வாய்ப்பில்லை என்பது புலனாகிறது. இது தவிர, தன்னிடம் தோற்றாலும் அள்ளனை அரசை ஏற்றுக் கொள்ளுமாறு பணித்த அதியனைப் பற்றிய செய்தியையும் அகநானூறு பாடல் சுட்டிக் காட்டுகின்றது. அப்பாடல்,

`ஆடுநடைப் பொலிந்த புகற்சியின் நாடுகோள்

அள்ளனைப் பணித்த அதியன் பின்றை' (325;7-8).

இது தவிர, நன்னனைப் பழித்த அதிகமானும், மிஞிலியின் பகைவனான அதியனும் ஒன்றாக இருக்க வேண்டும் எனும் முடிவினைப் பெறலாம். மிஞிலியின் பகைவன் அதியன் என்பதால் நன்னனைக் கொல்ல கோசர்படையிலிருந்து அதியனைப் பெறவில்லை என எண்ணும் நிலை தோன்றுகிறது. ஏனெனில் மிஞிலியும், நன்னனும் நண்பர்களாவர். மேலும், இவ்வதிகன் அதியர் குடியில் தோன்றியவன் என்பதற்கான அகச்சான்றுகளும், புறச்சான்றுகளும் கிடைக்கவில்லை. இவனைப் பாடிய பரணர், மாமூலனரின் அதியர்குடி சார்ந்த பிறமன்னர்களின் பாடல்களில் அள்ளனைப் பற்றியோ, அவனது பகைவனான மிஞிலியைப் பற்றியோ எவ்விடத்திலும் சுட்டிக் காட்டவில்லை. எனவே தன்னிடம் தோற்றாலும் அரசை ஏற்க அள்ளனைப் பணித்த அதியன் வேறு; அதியர்குடி வேறு என எண்ணும்போது அதியர்களுக்கும், கோசர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை யென்பது தெளிவாகிறது. 'சத்திய புத்திரா' எனும் பெயர் அதியர்களுக்குரியதா? கோசர்களுக்குரியதா? என்பதனை அறிய, தொல்லியல்கூறுகளும் சான்றுகளாகின்றன. அசோகனின் 13-ஆம் பாறைக் கல்வெட்டில் அவனது ஆட்சிக்குட்படாத அரசர்களாக, 'அருள் உள்ளம் கொண்ட தேவனாம்பிரியராகிய அரசர் பெருமானது (அசோகர்) ஆட்சிக்குட்பட்ட எல்லா இடங்களிலும், இவ்வெல்லைக்கு அப்பாற்பட்ட சோழ, பாண்டிய, சத்தியபுத்திர, கேரள புத்திரநாடுகளிலும்'(மா.இராசமாணிக்கனார்.4) விளங்கினர் எனக் கூறும் விதமாக வாசகம் அமைந்துள்ளது. இவ்வாசகத்தில் இடம் பெறும் 'சத்திய புத்திரர்' எனும் சொல் அதியர் குடியினரையே குறிக்கும். ஆனால், சிலர் அப்பெயரைக் கோசர்களுக் குரியதாகக் கூறுவர். 'சத்திய புத்திரர் இனமே கோசர்களாவர் எனத் திருவாளர் ஸ்மித், கே. ஏ. நீலகண்ட சாஸ்த்திரியார் போன்ற வரலாற்றாசிரியர்கள்: கூறியுள்ளனர்' என கா. கோவிந்தன்(தமிழகத்தில் கோசர்கள்.41)எடுத்துக்காட்டியுள்ளார். கோசர்களைச் சத்திய புத்திரர் எனக் கூறுவதற்கு, `நான்மொழிக் கோசர்' (அகநானூறு. 216), `நாலூர்க் கோசர்' (குறுந்தொகை.15) என வரும் பாடலடிகள் தக்க

உதாரணங்களாக அமைகின்றன. ஆனால், இப்பாடலடிகள் கோசர்கள் வாழ்ந்த நான்கு ஊரினையும் குறிப்பதாக உள்ளன.

'நன்னன்' எனும் குறுநில மன்னனையும் சத்தியபுத்திரர் எனக் கூறுவாரும் உளர். ஏனெனில், இக்குறுநில மன்னன் துளுநாட்டுப் பகுதியில் வாழ்ந்தவன் என்பதனாலே இவ் ஐயம் ஏற்படுகின்றது. ஏனெனில், துளுநாட்டுப் பகுதியில்தான் கோசர்களும் நிலை பெற்றிருந்தனர். இந்நிலையில் அசோகர் கூறிய சத்திய புத்திரர் என்பது அதியரே என்னும் கருத்திற்கு வலுசேர்க்கும் வகையில் பா. அன்பரசு (அதியமான்களின் வரலாறு. 32) 'ஸதியபுதோ அதியற் நெடுமான் அஞ்சி ஈந்த பாரி' என்ற ஜம்பைக் கல்வெட்டினை எடுத்துக் கூறி, இதில் தமிழில் வரும் 'அ' எனும் எழுத்திற்குப் பதிலாக 'ஸ' எனும் எழுத்தின் ஒலி பயின்று வரும். எனவே, `ஸதிய' என்பது 'அதிய' என்பதைக் குறிக்கும்' என்கிறார். கல்வெட்டின் எஞ்சியுள்ள பகுதியானது, அதியமான் நெடுமானஞ்சியைக் குறித்துச் சொல்கின்றது. மேலும், சத்திய புத்திரர் எனும் பெயர் அதியர்களுக்கே பொருந்தும் என்பதனை உறுதிப்படுத்த அகநானூற்றில்,

`......... ......... ......... வாய்மொழி

நல்இசை தரூஉம் இரவலர்க்கு உள்ளிய

நசைபிழைப்பு அறியாக் கழல்தொடி அதிகன்'(162;16-18) என்ற பாடலடிகளும் பொருந்துகின்றன. இப்பாடலுக்கு உரை தந்த உரையாசிரியர்கள், 'வாக்கு மாறாத அதிகன்' என்று பொருள் தந்துள்ளமை சிந்தனைக்குரியது. இப்பாடற் கருத்தினைத் துணையாகக் கொண்டு சத்தியபுத்திரர் என்பது அதியர் குடியைக் குறிப்பதோடு, இவ்வதியர்கள் அசோகரின் காலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதனையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

## கோசர்கள்: சத்தியபுத்திரர்கள் அல்லர்

அசோகரின் கல்வெட்டில் தமிழக மூவேந்தர்களின் ஆட்சிப்பகுதி சார்ந்த குறிப்புகள் இடம் பெறுவதோடு சத்தியபுத்திரர் நாடு பற்றிய குறிப்பும் இடம்பெறுகின்றது. சத்தியபுத்திரர் நாடு என்பது, அதியர் குடி சார்ந்த மன்னர்களின் நாடு, படைவீரர்களாக வினையாற்றிய கோசர்களின் நாடு, துளுநாட்டுப் பகுதியை ஆட்சி செய்த நன்னன்களின் நாடு எனப் பல்வேறு கருத்தமைதிகளை அறிஞர்கள் முன்வைத்துள்ளனர். கோசர்கள், இப்பெயருக்கு உரியவர்கள் என்பதைச் செவ்வியல் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. குறிப்பாக,

'......... ........ ............ நன்னன்

நறுமா கொன்று நாட்டில் போகிய

ஒன்றுமொழிக் கோசர் போல

வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே'(73:2-5) என வரும் குறுந்தொகைப் பாடலடியும், 'செம்மற் கோசர்'(15;2) என்ற அகநானூறு சொற்றொடரும் 'நாலூர்க் கோசர் நன்மொழி போல'(15-3) என்னும் குறுந்தொகை அடியும் சான்றுகளாக அமைகின்றன. மேலும், கோசர்கள் சார்ந்த வரலாற்றாசிரியர்களின் கருத்துக்களை கா. கோவிந்தன், எடுத்தியம்புகையில் 'சத்தியபுத்திரர் இனமே, கோசர்களாவர்' எனத் திருவாளர் ஸ்மித், கே. ஏ.நீலகண்டசாஸ்திரியார் போன்ற வரலாற்றாசிரியர்கள் கூறியுள்ளனர்' எனச் சுட்டிக் காட்டியுள்ளார்(தமிழகத்தில் கோசர்கள்.41). இம்மாதிரி யான பதிவுகளே கோசர்களைச் சத்தியபுத்திரர்களாகக் கருத வைக்கின்றன. ஆனால், சத்தியபுத்திரர் நாடு என்பது, அதியர் ஆண்ட ஆட்சிப்பகுதியினையே சுட்டுகின்றது. கோசர்களிலிருந்து பல தலைவர்கள் தோன்றி, படைத்தலைமையை ஏற்றுக் கொண்டாலும், கோசர்களில்/ன் தலைவர்களாக இருந்தவர்கள் பற்றி இலக்கியங்களில் எங்கும் பதிவு கிட்டப்படவில்லை. எனவே கோசர்களுள்/க்கு நிலையான தலைவர்கள் இல்லாத போது ஆட்சிப்பகுதியும் நிலையாக இருந்திருக்க முடியாது என்பதால் அசோகர் தன் கல்வெட்டில் சுட்டும், சத்தியபுத்திரர் நாடு என்பது கோசர்களுக்குரிய தல்ல என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது. ஆக, சத்தியபுத்திரர் நாடு என்ற அப்பெயர் அதியர்களின் நாட்டினையே குறிக்கும். இதுகாறும் கோசர்கள் வீரர்களாகத் தமிழகம் வந்த அயல்குடியினர் என்பதனை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

## கோசர்களின் போர்கள்:

துளுநாட்டுப் பகுதியில் தங்களது வீர வாழ்வினை மேற்கொண்ட கோசர்கள் பலர், போர்களில் வேந்தர்களுக்குத் துணையாய் நின்று வெற்றியைத் தேடித் தந்துள்ளனர். அதுதவிர்த்து இவர்கள், தாங்கள் மேற்கொண்ட போர்களால் தங்களுக்கென எவ்விதப் பயனையும் அடையவில்லையென்பது

தெளிவு. மேலும் கோசர்களின் போர்ச் செயல்பாடுகள், அவர்களின் வீரத்தினைப் பறைசாற்றுவனவாக அமைந்துள்ளன.

## கோசர்கள் - அன்னி மிஞிலி - திதியன்:

கோசர்கள், தங்களது ஆட்சிப்பகுதியில் அமைந்த நிலப்பகுதிகளில் பயிர்களை விளைவித்தனர். வயது முதிர்ந்த ஒரு முதியவரின் ஆநிரையானது தங்களது நிலங்களில் புகுந்து மேய்கின்றதைக் கண்ட கோசர்கள், இரக்கமில்லாது முதியவரின் கண்களைப் பிடுங்கினர். இதனால் கோபம் கொண்ட அம்முதியவரின் மகளான ‘அன்னி மிஞிலி’, அக்கொடிய கோசர்களை ஒறுக்கும் வரை கலத்திலிட்டு உணவினை உண்ணேன்; உடலிலிட்டுத் தூய ஆடையினை உடுத்திக் கொள்ளேன்’ சூளுரைத்தெழுந்தாள். இவளது சூளுரையினை நிறைவேற்ற உதவிக்கு போர்த்திறமிக்க - நல்ல குதிரைகளை உடைய - அழுந்தூர்ப் பகுதியை ஆண்ட திதியனை நாடினாள். புன்னை மரத்தினைக் காவல் மரமாகக் கொண்ட திதியனும், அன்னி மிஞிலிக்கு உதவும் பொருட்டுக் கோசர்களை அடக்கினான் என்ற நிகழ்வை அகநானூறு பதிவு செய்துள்ளது. அப்பாடல்,

`...... ....... ........ அருளாது

ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்

கலத்தும் உண்ணாள் வாலிதும் உடாஅள்

சினத்தின் கொண்ட படிவம் மாறாள்

மறம்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்

செருஇயல் நல்மான் திதியற்கு உரைத்து,அவர்

இன்னுயிர் செகுப்பக் கண்டு சினம்மாறிய

அன்னி மிஞிலி போல .......’ (262:5-12).

## கோசர்கள் - நன்னன் தொடர்பு:

துளுநாட்டுப் பகுதியினைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சிபுரிந்தவர்களே நன்னன் தலைமுறையினர். நன்னன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் காலத்தைச் சார்ந்தவன். இவன் கொண்கானத்துக்கிழான் எனச் சுட்டப்படுபவன். இக்குறுநிலமன்னன் ‘மா’ மரத்தைக் காவல் மரமாகக் கொண்டவன். இந்நன்னனது ஊரில் உள்ள நிலத்தில் மிதந்து வந்த மாங்காயைக் கோசர் குலப்பெண்ணொருத்தித் தின்றாள். இச்செயல் அறிந்து நன்னன் தன் உடல் பாகங்களுள் ஒன்றினை இழந்தது போல வருந்தினான். அப்பெண்ணின் தந்தையானவர் அவள் எடைக்குப் பொன்னும், யானைகள் பலவும் கொடுக்கத் தயாராக இருந்தும், கோபம் கொண்ட நன்னனோ, அப்பெண்ணின் தந்தை கொடுப்பதைக் கொள்ளாது, அப்பெண்ணின் உயிரை வாங்கினான். இதன் காரணமாக, `பெண் கொலை புரிந்த நன்னன்’ எனும் பெயர் பெற்றதோடு, கோசர் குடியோடு தீராப் பகையையும் ஏற்படுத்திக் கொண்டான். இந்நிகழ்வை, `மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை

புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு

...... ......... ........... .......

பெண்கொலை புரிந்த நன்னன் போல’(292:1-5)

என்ற குறுந்தொகை பாடலடிகள் காட்சிப்படுத்துகின்றன. இதனால் கோபம் கொண்ட கோசர்கள், நன்னனின் ஆற்றல் மிகுதியை வெல்லத் துடித்தனர். ஆனால் அவனை வென்ற பெருமை சேரர் குடியினரையே சாரும். கோசர்கள், அயல்நாட்டுக் குடியினர் எனும் போது அக்குடியில் இருந்து குறுநில மன்னர்கள் தோன்றினார்களா? என்பது ஆய்வுக்குரியதாகும். (ஒன்றுமொழி)வஞ்சினக்கோசர்கள், நன்னனை அவமானப்படுத்த அகவன் மகளிர்க்குப் பல யானைகளைப் பரிசிலாகத் தந்து அவனது காவல் மரமான மாமரத்தில் கட்டிபோடச் செய்ததாகவும், அடியோடு சாய்ந்த அம்மரக்கிளைகளை மக்கள் விறகுக்காக ஒடித்துச் சென்றதாகவும் ஒரு குறிப்பினைக் குறுந்தொகைப் பாடல் சுட்டிக்காட்டுகிறது(73). எனவே கோசர்களிடம் வஞ்சினம் இருந்ததே ஒழிய, நன்னன் கோசர்களால் வெல்லப்படவில்லை யென்றாலும் அவனைப் பழிவாங்கவும், அவமானப்படுத்தவும் அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர் என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

## கோசர்கள் - பழையன் தொடர்பு:

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் சிறுவயதிலேயே பல வெற்றிகளைப் பெற்றுவந்தான். இதனைப் பொறாத சேரர்கள் மற்றும் சில குறுநிலமன்னர்களும் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைத்துக் கொண்டனர். பாண்டியனோ தன்னோடு கோசர்களை இணைத்துக் கொண்டான். பாண்டியர்களின் எதிரி கூட்டணிக்குக் கிள்ளிவளவன் தலைமையேற்று நடத்தினான். பாண்டியர்களோடு நின்ற கோசர்கள் தங்கள் படைக்குப் பழையனைத் தலைமை தாங்க வைத்துப் பாண்டியனுக்கு வெற்றியைத் தேடித்தந்தனர். இவ்வெற்றியின் காரணமாகவே பாண்டியன், மோகூர்ப் பகுதியைப் பழையனுக்குக் கொடுத்தான் எனப் பதிற்றுப்பத்து எடுத்துக்காட்டுகின்றது. இங்குப் பழையன், கோசர்குடி சார்ந்தவனா? எனும் செய்தி விளக்கப்பட வேண்டியுள்ளது.

## பழையன் அறிமுகம்:

தமிழகம் ஆண்ட சங்ககால வேந்தர்கள் தங்களுக்கும், படைக்கும் துணையாகச் சில குறுநில மன்னர்களைக் கொண்டு விளங்கினர். இக்குறுநில மன்னர்கள் வேந்துவிடு தொழில் புரிபவர், படைக்காவலர் மற்றும் தலைமை எனும் கடமைகளைச் செய்பவர்களாக விளங்கினர் என்பது தெளிவு. பண்டைக்கால குறுநில மன்னர்கள் சிறந்து விளங்கினாலும் மூவேந்தர்கள் தங்களுக்குக் கீழாகவே அவர்களை வைத்திருந்தனர் என்பதற்குக் குறுநில மன்னர்களின் வாழ்வியலே சான்றாக அமைகின்றது. இம்முறையில் சோழனின் வீரனாக விளங்கிய போஓர் பழையன் மற்றும் பாண்டியனின் படைத்தலைவனான பழையன் என இருவரையும் சங்கப்பாடல்கள் அடையாளப்படுத்துகின்றன.

## பாண்டியன் வீரன் பழையன்:

மோகூரின் தலைவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் படைத்தலைவன். இம்மோகூர் 'நாமக்கல் மாவட்டத்து மோகனூர் என்ற ஊரின் பழைய பெயர் மோகூர் என்பதே'(2010:69) என கா. கோவிந்தன் கூறியுள்ளார். மேலும், பதிற்றுப்பத்திற்கு உரையெழுதிய ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, மோகூரை 'மதுரைக்கு வடக்கில் உள்ள திருமோகூர் இது போலும்' 1950: 205) எனச் சுட்டுகிறார். பாண்டியனின் படைத்தலைவனாக விளங்கிய பழையன் நாமக்கல் மாவட்டம் பகுதியினைச் சார்ந்தவனாக இருக்க முடியாது. ஏனெனில் நாமக்கல் கொங்குநாட்டுப் பகுதியுள் ஒன்றாகும். இக்கொங்குப்பகுதி ஒருகாலத்தில் சேரர், சோழர் வசம் இருந்ததாகச் சங்கப்பாடல்கள் விளக்குகின்றன.

பாண்டிநாடு கொங்கு நாட்டெல்லைக்கு அப்பால் உள்ளதால் மோகூரை நாமக்கல் மாவட்டத்து மோகனூர் எனக் கொள்ள இயலாது. திருமோகூர் பாண்டிநாடான மதுரைக்குள் அடங்கியுள்ள காரணத்தால் திருமோகூரே 'மோகூர்' என வழங்கலாயிற்று என்னும் கருத்தானது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. மேலும் இக்கருத்திற்கு வலுச்சேர்க்கும் விதமாகப் பழையன் மதுரையைத் தாக்க வந்த கிள்ளி வளவனோடு போரிட்டு சோழனைத் தோற்கடித்தான் என்பதனை அகநானூறு,

'...... ...... .......... நெடுந்தேர்

இழையணி யானைப் பழையன் மாறன்

மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்

வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த

கிள்ளி வளவன் நல்அமர் சாஅய்க்'(346: 18-22)-என வரும் பாடல் விவரிக்கின்றது.

## பழையன் கோசர் குடி சார்ந்தவனா?

போஓர் பழையன், மோகூர்ப் பழையன் என இருவரில் மோகூர்ப்பகுதியை ஆண்ட பழையனே கோசர்குடி சார்ந்தவனா? இல்லையா? எனும் ஐயத்திற்குரியவன். பாண்டியனின் படைத்தலைவனாக இருந்து பல வெற்றிகளைத் தேடித்தந்தவன். இக்குறுநில மன்னன் கோசர்குடியில் தோன்றி தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் நெறிமரபில் நின்று அவன் வாய்மொழிக்கேட்டு நடப்பவன் என்பதற்கும், கோசர் குடியைச் சார்ந்த வீரர்கள் பழையன் கீழ் இருந்து போருடற்றினர் என்பதற்கும் மதுரைக் காஞ்சியில் வரும்,

'பூத்த சுற்றமொடு பொலிந்துஇனிது விளங்கிப்

பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்

பெரும்பெயர் மாறன் தலைவ னாகக்

கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்

இயல்நெறி மரபின் நின்வாய்மொழிக் கேட்ப' (770-774)

என்ற அடிகள் ஆதாரமாகத் திகழ்கின்றன. கிள்ளிவளவன், யானைக்கண் மாந்தரஞ்சேரல் இரும்பொறையுடன் திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் எனும் குறுநிலமன்னர்களும் ஒன்றாகக் கூடி பாண்டியனை எதிர்த்து வந்தனர். அச்சமயம் நன்னனை வென்ற கோசர்கள் பாண்டியநாடு புகுந்தனர். நெடுஞ்செழியன் தனது படைக்குத் துணையாகக் கோசர்களை இணைத்துக் கொள்ள, அக்கோசர்குடியில் வீரம்மிக்க பழையனைப் படைத்தலைவனாக நியமிக்க அவனோ பாண்டியனுடன் உடன்நின்று வெற்றியைத் தேடித்தந்தான் என அகச்சான்றுகள் கூறுகின்றன. பழையன் கோசர்குடி சார்ந்தவன் எனும் கருத்தினை மேலும் வலியுறுத்தும் விதமாகப் பழையனின் அவையில் கோசர்கள் இடம் பெற்றிருந்தனர் என்பதை மதுரைக் காஞ்சி,

`பழையன் மோகூர் அவையகம் விளங்க

நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன' (508-509) என்கிறது.

இவையாவும் பழையன் கோசர்குடி சார்ந்தவன் என எண்ணும் அளவிற்கு அமைந்துள்ளன.

ஆனால் 'கோசர் வெளிநாட்டுக் குடியினர் என்றும், மௌரியர் தமிழ்நாட்டின் மீது படையெடுத்த போது இங்கு வந்து குடியேறினர்'என, S.கிருக்ஷ்ணசாமி கூறியுள்ளதாக, மொ.அ. துரைஅரங்கசாமி(278) சுட்டிக் காட்டியுள்ளார். மோரியர்களின் தமிழகப் படையெடுப்பானது பழையன், பாண்டியனால் மோகூரின் குறுநில மன்னனாக நியமிக்கப்பட்ட பின்பே நடந்தது. அப்போரில் மோரியருக்குத் துணையாக வடுகர் இருந்தனர். பழையன் தன் படையோடு பாண்டியன் படையையும் உடன் கொண்டு மோரியர்களைத் தோற்றோடச் செய்தான் என்பதனை அகநானூறு,

'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்

தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு

விண்ணுற ஓங்கிய பணிஇருங் குன்றத்து

ஒண்கதிர்த் திகரி உருளிய குறைத்த'(281;8-11)

என்ற பாடல் எடுத்துக்காட்டுகின்றது. இக்கருத்தின் மூலம் மோரியப் படையெடுப்பிற்குப் பின் வந்த கோசர் குடியானது எவ்விதம் பழையனைச் சாரும் என்ற ஐயம் எழுகின்றது. இதுதவிர, கா. கோவிந்தன், கோசர்களை அறிமுகப்படுத்தும் போது 'தமிழகத்தில் குடி புகுந்தவருள் கடைசியானவர் கோசர்கள். கோசர்களின் குடியேற்றம் கி.மு.3(அ)2ஆம் நூற்றாண்டின் பின் நிகழ்ந்ததென்று தோன்றுகிறது. கோசர் என்பவர் குஷாணர்களேயன்றி வேறல்லர்'(2010:74) என வரும் பதிவானது மேற்கண்ட ஐயத்தினை மேலும் வலுப்படுத்துகின்றது. இத்தரவுகளைத் துணையாகக் கொண்டு கோசர்கள் தமிழர்கள் அல்லர் என்பதுவும் வடநாட்டுப் பகுதியினர் என்பதுவும் தெளிவாகிறது. போர் செய்வதனைத் தொழிலாகக் கொண்ட குடியினரே கோசர்கள் என்பதனை ஒருவாறு உறுதி செய்யலாம். பழையன் என்பவன் கோசர்குடி சார்ந்தவனாக இருந்தால் அவன் தமிழ்க்குடி சார்ந்தவனாக இருக்க முடியாது. மோகூர்ப் பழையனைப் பற்றிய அகச்சான்றுகள் மேற்கண்டதற்கான சான்றுகளைத் தரவில்லை யென்பதால் பழையன் கோசர்குடி சார்ந்தவன் அல்ல எனும் முடிவினைப் பெறலாம்.

## மோரியர்களுடன் தொடர்பு

மோகூர்ப் பகுதியை ஆண்ட பழையன், கோசர்குடியில் தோன்றியவன் அல்லன் என்பதற்கு மோரியர்களின் தமிழகப் படையெடுப்புத் தக்க சான்றாக அமைந்துள்ளது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் மோகூர்ப் பகுதியைத் தலைமையிடமாகக் கொண்டவன் பழையன். இவன் நாடு, அயலவர் தமிழகம் புகாத வண்ணம் பாண்டி நாட்டின் எல்லையில் அமைந்திருந்தது. தமிழகம் வரப் போந்த மோரியர்கள், பழையனை வென்றால்தான் உள்ளே நுழைய முடியும் என எண்ணி வடுகர்களையும், கோசர்களையும் துணையாகக் கொண்டனர். இக்காட்சியினை அகநானூறு,

'துனைகால் அன்ன புனைத்தேர்க் கோசர்

தொல்மூதா லத்து அரும்பணைப் பொதியில்,

இன்இசை முரசம் கடிப்புஇகுத்து இரங்கத்

..................... ............... ............... ..........

மாகெழு தானை வம்ப மோரியர்'(251:7-12)

என்ற பாடலில் காட்சிப்படுத்துகின்றது. மேலும், அச்செய்தியையே அகநானூறு 281-ஆம் பாடலும் குறிப்பிடுகின்றது. எனவே, கோசர்கள் மோரியர்களுடன் பழையனை வெல்லத் துணைநின்றனர் என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது. மேலும், மோரியர்கள் தமிழகம் வர முக்கிய காரணமாகக் கோசர்கள் விளங்கினர் என்பதனையும் அறிய முடிகின்றது.

## கோசர்குடியில் தோன்றிய தலைவர்கள்:

அதிகன், மிஞிலி, அகுதை, பழையன் மாறன், ஈந்தூர்கிழான் கோயன் மாறன், தழும்பன் போன்றோர் கோசர்குடி சார்ந்தவர்கள் என்பது ஒரு சில நூலாசிரியர்களின் கருத்தாகும். பொதிகைமலைப் பகுதியை ஆட்சி செய்த அதியர்குடி சாராத அதிகனொருவன், 'அன்னி' எனும் குறுநிலமன்னனின் மகளான அன்னி மிஞிலி, பொன்னாலான ஆழியை உடைய அகுதை, நெடுஞ்செழியனின் படைத்தலைவன் பழையன் மாறன், ஈந்தூரின் தலைவனான ஈந்தூர் கோயன்மாறன், ஊனூரின் தலைவனான தழும்பன் போன்றோர் கோசர்குடியிலிருந்து தோன்றியவர்கள் என்பதற்கு இவர்களைச் சார்ந்த பதிவுகளைத் தரும் அகச்சான்றுகளில் காணக் கிடைக்கவில்லை. மேற்குறிப்பிட்ட அனைவரும் தமிழ்க்குடியிலிருந்து தோன்றியவர்கள் என்பது தெரியவருகிறது. வேந்தர்களும், குறுநிலமன்னர்களும் தங்களது பகைவர்களைத் தாக்க படைவீரர்களாகவே கோசர்களைப் பயன்படுத்தியுள்ளனர். இவர்கள் தமிழகத்தில் குடிபுகுந்தவர்களே என்பதற்குச் சான்றாகத் 'தமிழகத்தில் குடி புகுந்தவருள் கடைசியானவர் கோசர்களாவர். கோசர்களின் குடியேற்றம் கி.மு.3(அ)2ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்ததென்று தோன்றுகின்றது. கோசர் என்பவர் குஷாணர்களேயன்றி வேறல்லர்'(2010:74) என வரும் கா. கோவிந்தனின் கூற்று அமைந்துள்ளதனைக் காணலாம். எனவே 'கோசர்கள்' தமிழகம் போந்த அயலாரே என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

## கோசர்கள் வரலாறும் காலமும்:

கோசர்களின் வரலாறு குறித்துப் பல்வேறு கருத்துகள் வரலாற்றாசிரியர்களிடையே நிலவி வருகின்றன. கோசர்களின் நாடு துளுநாடாகும். சேரர்களுக்குரித்தான கொங்குநாட்டிலும், சோழர்களுக்குரியதாகக் கூறப்படும் செல்லூர், நியமம், வட்டாறு, அழுந்தூர் முதலிய ஊர்களிலும் வசித்து வந்தனர் என்பதற்கும் பாண்டியர்களின் வெற்றிக்கு உற்ற துணையாக நின்றனர் என்பதற்கும் இலக்கியங்களில் சான்றுகள் காணப்படுகின்றன. கோசர்களின் வரலாற்றினைத் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை(1965:129) குறிப்பிடுகையில் 'பிரம தேவன் வழிவந்த குசவ முனிவன் மக்களான குசநாபன், ஆதூர்த்தன், வசு என்ற நால்வரும் கௌசாம்பி முதலிய நான்கு பெருநகரங்களை நிறுவி வாழ்ந்தனர் என்றும், அவர்களின் வழிவந்தவர் என்றும், நான்கு ஊர்களை நிலை கொண்டு வாழ்ந்தமை பற்றி, இவர்கள் நாலூர்க்கோசர் என்றும் கூறப்பெற்றனர்' எனத் தொகுத்துக் கூறியுள்ளார். இக்குறிப்பில் கோசர் மரபில் வரும் நால்வரின் பெயர் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அந்நால்வர் ஆண்ட ஆட்சிப்பகுதிகளின் பெயர்களில் 'கௌசாம்பி' தவிர பிற இடம்பெறவில்லை. மேலும் ஓர் குடியினர் தங்கள் வாழ்நாளில் தங்களை அடையாளப்படுத்த ஏதேனும் சில பகுதிகளை ஒருங்கிணைத்து ஆட்சி செய்து வந்தால் மட்டுமே தலைமைப் பொறுப்பிற்குரியவராக விளங்க முடியுமே தவிர ஒரு ஊரை மட்டும் ஆள்பவர் சிறக்க முடியாது.

எனவே கௌசாம்பி (அ) கோசாம்பி நாட்டில் வாழ்ந்த மற்றும் ஆட்சி செய்தவர்களே கோசர்கள் எனும் கருத்துப் பொருத்தமுடையதன்று. இதற்கு வலுச்சேர்க்கும் விதமாகக் 'கோசர்கள் தமிழகத்தின் வடக்கிலிருந்தனர். பழமையான வரலாறுடைய கோசர்கள் துளுநாட்டிலும், கருநாடகத்திலும், பிற இடங்களிலும் இருந்தனர். கி.பி.4ஆம் நூற்றாண்டைய அரசியல் கூட்டில் கோசர்களுமிருந்தனர்'(ப.79)என வே.தி. செல்லம் கூற்று அமைந்துள்ளது. இதன் வாயிலாக, மோரியர் காலத்தில் தமிழகம் புகுந்த கோசர்கள் பிற்காலக்கட்டத்திலும் நிலையான வாழ்வியலைப் பெறவில்லை என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது. அடுத்ததாக, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, 'கோசாம்பி நாட்டைப் பின்னர் 'வத்ஸன்' என்ற வேந்தன் ஆண்டானென்றும், வத்ஸ கோசர் என்பது இளங்கோசர் என்று தமிழர்களால் மொழிபெயர்க்கப் பெற்றது எனவும் கூறுகின்றனர்'(1965:129) என்று ஒரு வரலாற்றாசிரியரின் குறிப்பினைச் சுட்டுகிறார். இங்கு அகச்சான்றுகளில் வரும் 'இளங்கோசர்' எனும் சொல் கொண்டு, இக்குறிப்புத் தோன்றியிருக்குமோ என எண்ண முடிகின்றது. ஆனால் கோசர் பற்றிய பதிவுகளைத் தரும் அனைத்து இடங்களிலும் இளங்கோசர் என்று மட்டுமே குறிப்பு இடம் பெறவில்லை. புறநானூறில் `முதுகோசர்' (169), அகநானூறில் `செம்மற்கோசர்'(15) போன்ற இம்மாதிரியான குறிப்புகளும் காணப்படுகின்றன.

இவைகளைக் கருத்திற் கொண்டு மேற்கண்டவை கோசர்களின் பண்பினைக் குறிக்க எடுத்தாளப்பட்டவை என்றும் அவைகளைக் கொண்டு வரலாற்றினைக் கூற இயலாது என்பதனையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இது தவிர நான்கு ஊர்களில் வாழ்ந்து, நான்கு வகையான மொழி

பேசுபவர் என்பதால் 'நான்மொழி நாடு' அவர்களுக்குரியதாகக் கொள்ள இடனுண்டு எனக் கூறுவாரும் உளர். இதற்கு கா. கோவிந்தன்(2010:43), 'திருவறைக் கல்லும் நான்மொழிநாடும் உடைய வத்தவ ராயனான விடுகாதன்' என வரும் கல்வெட்டுத் தொடரைச் எடுத்துக்காட்டாக வைக்கின்றார். ஆனால் குறுந்தொகையில்(15) மூலபாடத்தில் `நன்மொழி' என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுகாறும் நாலூர்க்கோசர், நான்மொழிநாடு குறித்தான ஐயப்பாட்டினைச் சிறிதளவேனும் நிறைவு செய்து கொள்ள முடிகின்றது.

மேலும் 'சங்க காலத்தேய மேலைக் கடற்கரைப் பகுதியில் யவனர் பலர் குடியேறி இருந்தனர். அவர்களுக்குப்பின் இக்காலத்தே சோனகரும் பின்னர் ஐரோப்பியரும் வந்து சேர்ந்தனர். இவ்வாறு வந்தோருள் பாபிலோனியா நாட்டிலிருந்து போந்து தென்னாட்டிற் குடியேறியவர்கள் இக்கோசர் என்று அறிகிறோம்' என்ற வரலாற்றுக் குறிப்பும் நிலவி வருகின்றது என்கிறார் ஔவை சு. துரைசமிபிள்ளை(1965:13), இக்குறிப்பானது யவனர்கள் எனக் குறிப்பிடும் கிரேக்க ரோமானியர்களைப் போலவே கோசர்களும் உட்புகுந்த குடியினரே எனும் பதிவினை முன்வைப்பதாக அமைந்துள்ளது, ஆனால் இவர்கள் எதன் பொருட்டு உள்ளே நுழைந்தனர் என்பது விளங்கவில்லை. நாடு பிடிக்கும் கொள்கையுடன் வந்திருந்தனர் என்றால் அதற்கான சான்றுகள் எங்கும் இடம்பெறவில்லை என்பது தெளிவு. மோரியர் தமிழகம் புகுந்த போதும் தங்களுக்குத் துணையாகக் கோசர்களையே வைத்துக் கொண்டனர் என்பதனை,

'துனைகால் அன்ன புனைத்தேர்க் கோசர்

தொல்மூ தாலத்து அரும்பணைப் பொதியில்

...... ............ ............... ............

மாகெழு தானை வம்ப மோரியர்'(251:7-12)

என்ற அகநானூறு பாடல் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. மேலுமுள்ள அகச்சான்றுகள் இவர்களது நிலையான வாழ்வியலைப் புலப்படுத்தவில்லை. கோசர்குடி சார்ந்தவர்கள் என்பது ஒரு சில நூலாசிரியர்களின் கருத்தாகும். இது தவிர இவர்கள் ஆட்சி புரிந்ததற்கான பதிவுகளும் எங்கும் இடம்பெறவில்லை, எனவே கோசர்கள் வீரத்தை வெளிக்காட்டவே பிற குடியாகத் தமிழகம் புகுந்தனர் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

## கோசர்களின் காலம்

கோசர்கள் ஈடுபட்ட போர்கள் மற்றும் அவர்களோடு தொடர்புடைய வேந்தர், குறுநிலமன்னர்களின் காலத்தை அடிப்படையாகக் கொண்டு, கோசர்களின் காலம் வரையறை செய்யப்படுகின்றது. கோசர்களால் கண்களை இழந்த தந்தையின் நிலைக்குப் பழி வாங்கத் துடித்த அன்னிமிஞிலிக்காகத் திதியன் கோசர்களோடு போரிட்டான். பெண் கொலை புரிந்த நன்னன் என்பவனோடு ஈடுபட்ட போர், கிள்ளிவளவனுக்கு எதிராகப் பாண்டியர்களோடு இணைந்து கோசர்கள் மேற்கொண்ட போர் மற்றும் மோரியர்கள் தமிழகம் வர அவர்களோடு துணைநின்று பழையனோடு நிகழ்த்திய போர் என இப்போர் நிகழ்வுகளைக் கருத்திற்கொள்ளும் போது கோசர்களின் காலத்தைச் சிறிதளவேனும் ஊகிக்க முடிகின்றது. தேரழுந்தூரை ஆண்ட திதியனின் காலம் கி.பி.1-ஆம் நூற்றாண்டு என்பதும் பெண் கொலை புரிந்த நன்னனின் காலம் கி.பி.1-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குள் அடங்கும் என்பதும் இவ் ஆய்வின் முடிவு. இக்காலக்கட்டத்தில் கோசர்கள் தமிழகத்தில் வீரம் மிக்கக் குடியினராக விளங்கினர் என்பதில் ஐயமில்லை. எந்தக் குடியினராக இருந்தாலும் தாங்கள் வந்து சேர்ந்த இடத்தில் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள சிறிது காலம் தேவைப்படும்.

அவ்வகையில் கி.பி.1-ஆம் நூற்றாண்டுகளில் பல மன்னர்களுக்கு வெற்றியை ஈட்டித்தரும் கோசர்கள் செல்வாக்குடையவர்களாக விளங்கினர். எனவே கோசர்களின் தமிழக வருகை இதற்கு முன்பே நிகழ்ந்திருக்க வேண்டும். கோசர்களின் வருகையை கா. கோவிந்தன், 'தமிழகத்தில் குடி புகுந்தவருள் கடைசியானவர் கோசர்கள், கோசர்களின் குடியேற்றம் கி.மு.3(அ)2-ஆம் நூற்றண்டில் நிகழ்ந்ததென்று தோன்றுகிறது'(2010: 74) எனத் தோராயமாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இதனைக் கொண்டு கி.மு.3-1-ஆம் நூற்றாண்டுகளில் தமிழகம் சேர்ந்த கோசர்கள் கி.பி.3-ஆம் நூற்றாண்டு வரை தமிழக அரசியலில் கோலோச்சியுள்ளனர் என எண்ண முடிகின்றது.

## முடிவுரை

தமிழகம் சாராத குடிகள் பெரும்பாலும் வாணிகத்தின் பொருட்டும், நாட்டெல்லையை விரிவுபடுத்தும் நோக்கம் கொண்டும் வந்தனர் என்பது தெளிவுறுகிறது. கோசர்கள் போர்வீரர்களாவர். தமிழக எல்லைப் பகுதியில் அமைந்த துளுநாட்டைத் தனக்குரியதாகக் கொண்டவர்கள்.

மோரியர்களுக்கு உதவிய இவர்கள் வன்மையான குணம் உடையவர்கள் என்ற செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன. திதியன், நன்னன், பழையன் போன்றோருடன் போர் புரிந்த கோசர்கள், சத்திய புத்திரர்கள் அல்லர் என்பதும், மோரியர்கள் தமிழகம் வருவதற்குக் கோசர்கள் காரணமாக இருந்தனர் என்பதும் அறிய முடிகின்றது. தமிழ்க்குடியினர் அல்லாத கோசர்கள் கி.மு. 3-1ஆம் நூற்றாண்டுகளில் தமிழகம் நுழைந்து, கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரை உள்ள அரசியலில் சிறந்து விளங்கினர் என அறியப்படுகின்றது.

## References

அரங்கசாமி துரை. மொ.அ. (1960), சங்ககாலச் சிறப்புப் பெயர்கள் (இலக்கியச் சிறப்புப் பெயர்களும், குடி பற்றிய சிறப்புப் பெயர்களும்), பாரிநிலையம், சென்னை.

அன்பரசு பா. (2002), அதியமான்களின் வரலாறு, விஜயம் பதிப்பகம், சேலம்.

இராசமாணிக்கனார் மா. (டிசம்பர்2008), கல்வெட்டுகளும் தமிழ்ச் சமூக வரலாறும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

இராஜகோபாலாரியன் (1933), அகநானூறு, கம்பர் விலாசம், சென்னை.

கோவிந்தன் கா. (1960), தமிழகத்தில் கோசர்கள், அருணா பப்ளிகேக்ஷன்ஸ், தியாகராய நகரம், சென்னை.

கோவிந்தன் கா. (2010), 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், ராமையா பதிப்பகம், சென்னை.

சத்தியவாணி போ. (2013), தமிழ்ச்செவ்வியல் நூல்களில் பிறகுடிகளின் பதிவுகள், முனைவர் பட்ட ஆய்வேடு, தியாகராசர் கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

சாமிநாதையர் உ.வே. (2017), குறுந்தொகை மூலமும் உரையும். (ஏழாம் பதிப்பு), டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.

செல்வம் வே.தி. (2004) தமிழக வரலாறு புதிய பார்வை, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.

துரைசாமிப்பிள்ளை சு.ஔ. (1950), பதிற்றுப்பத்து மூலமும் விளக்கவுரையும், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

துரைசாமிப்பிள்ளை சு.ஔ. (1965), பண்டைய நாளைச் சேர மன்னர் வரலாறு, திருவளர் பதிப்பகம், தூத்துக்குடி.

நச்சினார்க்கினியர் (1889), பத்துப்பாட்டு மூலமும் உரையும், கபீர் அச்சுக்கூடம், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License